குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
எஸ்.டி.சி.எண்.2555/2024

அ.சா.6

2026–ம் ஆண்டு மார்ச் 03–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 06–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அங்கமுத்து | தொழில் | |
| தந்தை பெயர் | சென்றாயன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.22 மணி,

Accused Selvakumar present. Advocate Mr.M.S.Karthikeyan present for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் தமிழ்நாடு காவல் துறையில், காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து, கடந்த 30.05.2024 ஆம் தேதி பணிமூப்பு சம்மந்தமாக ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 17.11.2023 ஆம் தேதி ஓமலூர் காவல்நிலையத்தில் நான் காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, 14.00 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்தபோது, அதற்கு முன்னதாக ஓமலூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் சிறப்பு உதவி ஆய்வாளர் அன்பழகன் என்பவர் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சௌமியா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து, ஆஜர் செய்த வாக்குமூலத்தின் பேரில் நிலைய குற்ற எண்.790/2023 சட்டப்பிரிவுகள் 279, 337 இதச–ன் படி, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

2. பின்பு, வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 16.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஷேக் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும்

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2026.03.03 17:22:35 +0530

மாதிரி வரைபடம் தயார் செய்தேன். ( **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும், மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)**

3. சாட்சிகள் சந்திரா, ரத்தினம், வீரமணி, ஷேக், கிருஷ்ணன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பின்பு அன்றைய தினமே மருத்துவமனை சென்று சிகிச்சையில் இருந்த புகார்தாரர் சௌமியா மற்றும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த பிரபா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன் தொடர்ச்சியாக 17.11.2023 ஆம் தேதி 18.00 மணிக்கு வாதியின் உறவினர்கள் நிலையத்தின் முன்பு இருந்த எதிரியை அடையாளம் காட்ட அன்றைய தினமே கைது நிலையம் கொண்டு வந்து தக்கபிணையில் விடுவித்தேன். பின்பு, அன்றைய தினமே விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 30 N 1202 என்ற பதிவெண் கொண்ட அரசு பேருந்தினை வேண்டுகோள் கடிதத்தின் பேரில், மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன்.

4. பின்பு, மோட்டார் வாகன ஆய்வாளர் கவிதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். ( **அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) பின்பு, சம்பவத்தில் காயமடைந்து சேலம் பிரணவ் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த சாட்சி பிரபா என்பவருக்கு சிகிச்சையளித்து காயச்சான்றிதழ் வழங்கிய சேலம் பிரணவ் மருத்துவமனை மருத்துவர் சுரேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றேன். ( **அந்த பிரபா என்பவரின் காயச்சான்று அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**5.** பின்பு, சம்பவத்தில் காயமடைந்து சேலம் ஸ்ரீகோகுலம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த சாட்சி சௌமியா என்பவருக்கு சிகிச்சையளித்து காயச்சான்றிதழ் வழங்கிய சேலம் ஸ்ரீகோகுலம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை மருத்துவர் பாலாஜி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றேன். ( **அந்த சௌமியா என்பவரின் காயச்சான்று அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.03.03 17:22:39 +0530

6. பின்பு, சம்பவத்தில் காயமடைந்த சாட்சிகள் பிரபா மற்றும் சௌமியா ஆகியோருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று மருத்துவர்கள் காயச்சான்று வழங்கியதன் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இ.த.ச விலிருந்து 279, 338 இதச ஆக மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். ( **அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்பு, புலன் விசாரணை முடித்து சம்பவம் உண்மை என தெரியவந்ததார் எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

8. சம்பவ இடம் காமலாபுரத்தில் இருந்து நாலுக்கால்பாளம் செல்லும் சாலையில் கட்டிக்காரனூர் பேருந்து நிறுத்தம் அருகே என்றால் சரி. சம்பவ இடத்திற்கும், கட்டிக்காரனூர் பேருந்து நிறுத்தத்திற்கும், சுமார் 15 அடி தூரம் இருக்கும் என்றால் சரி. மாதிரி வரைபடத்தில் சம்பவ இடத்திற்கும், கட்டிக்காரனூர் பேருந்து நிறுத்தத்திற்கும், 30 அடி தூரம் இருக்கும் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி.

9. வழக்கு கோப்புகளில் விபத்து நடந்த இடம் கட்டிக்காரனூர் பேருந்து நிறுத்தம் என்று நான் குறிப்பிட்டுள்ள நிலையில், மாதிரி வரைபடத்தில் சம்பவ இடம் காமலாபுரத்தில் இருந்து நாலுக்கால்பாளம் செல்லும் சாலையின் இடதுபுற ஓரமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. இவ்வழக்கு சாட்சி 3 சந்திரா சம்பவத்தின்போது, வாதியுடன் இருந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் அவருக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரி.

10. சம்பவம் நடந்த போது சம்பவ இடத்தில் யார்  இருந்தார்கள் என்றால், சம்பவம் விடியற்காலை 05.00 மணிக்கு நடந்ததால், சாட்சிகள் அனைவரும் சத்தம் கேட்டுதான் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். இவ்வழக்கில் காயம்பட்ட நபர்கள் சௌமியா மற்றும் பிரபாவுடன் சந்திரா என்பவர் மட்டும் தான் உடனிருந்தார். சாட்சிகள் இரத்தினம் மற்றும் வீரமணி ஆகியோர் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.03.03 17:22:43 +0530

11. அ.சா.1 மற்றும் அ.சா.2–ன் போலிசார் விசாரணையிலும், புகாரிலும் சம்பவத்தின்போது சம்பவ இடத்திற்கு அருகில் யார்யார் குடியிருந்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் பேருந்தில் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் காலம் 12–ல் வாகனத்தில் எவ்வித சேதமும் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி.

12. பொதுவாக, விபத்திற்குள்ளான வாகனத்தில் சேதம் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது என்றால், இரண்டு வாகனங்கள் மோதிக்கொள்ளும் போது சேதம் ஏற்படும், ஆனால், ஒரு வாகனம் ஒரு நபரின் மீது மோதும்போது சேதம் ஏற்படுவதற்கு வாய்ப்பு குறைவாகவே உள்ளது. எதிரி மோட்டார் வாகன விதிகளுக்கு உட்பட்டு, சாலையின் ஓரமாக பேருந்தினை ஓட்டிச்சென்றார் என்றாலும், இவ்வழக்கு விபத்து எதிரியின் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை என்றாலும், விபத்தில் காயமடைந்த நபர் கவனக்குறைவாக தார்சாலையில் நடந்து சென்றதால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

13. இவ்வழக்கு சாட்சி அ.சா.2 சம்பவத்தின்போது, தார் ரோட்டில் நடந்து சென்றதாக போலிசார் விசாரணையில் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் சாலை விதிகளை பின்பற்றாமல், அஜாக்கிரதையாக தார்சாலையில் நடந்து சென்றதால் விபத்து ஏற்பட்டது என்றாலும், எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல.

14. இவ்வழக்கு சாட்சிகளை மருத்துவமனைக்கு அழைத்து சென்ற நபர்களை இவ்வழக்கு சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரி. இவ்வழக்கு சாட்சிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 விபத்தில் காயம்பட்டதாக அவர்களது உறவினர்களுக்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்று விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயாரித்துவிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரி.

15. இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து 20.12.2023 ஆம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரி. விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2026.03.03 17:22:48 +0530

வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் விபத்திற்கு காரணம் வாகனத்தில் இருந்த இயந்திர கோளாறு அல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.05 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2026.03.03 17:22:52 +0530